## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR

## OS. No.307/*2024*

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi, Assistant in accordance with the provisions of Act X of 1873 on 22.06.2026.

| | | | |
|---|---|---|---|
| Name | அனந்தசயனம் | Religion | |
| Father Name | சம்பத்குமரன் | Age | 57 |
| Village | | Calling | |
| Taluk | | | PW1 CROSS |

ஒன்றாவது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. பிரதிவாதிகள் தரப்பு ஆவணத்தை ரத்து செய்யக்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் மண்ணிவாக்கத்தில் உள்ள காசா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்குரைப்படி கே. வரதப்ப நாயக்கர் இடமிருந்து ஆவண எண்.2984/1964 என்ற ஆவணத்தின் அடிப்படையில் தான் உங்களுக்கு விற்பனை செய்தவர்கள் சொத்து வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஆவணம் எண்2000/1964 மற்றும்2236/1964 என்ற ஆவணங்கள் அடிப்படையில் தான் கே. வரதப்ப நாயக்கரிடமிருந்து உங்களுக்கு விற்பனை செய்தவர்கள் சொத்தை வாங்கினார்கள் என்றால் அந்த விவரங்கள் எனக்கு தெரியாது. ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். ஆதியில் இந்த சொத்து கே வரதப்ப நாயக்கர் மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு **RC.2064/1975** என்ற பதிவினை பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். பிரிக்கப்பட்ட விவரம் தெரியும்.

2. ஆனால் அதற்கு பதிவு எண் எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனை பிரிவின் வரைபடமும், **RC.2064/1975** இதில் உள்ள வரைபடமும் இரண்டும் ஒத்துப் போகிறதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த எனது தரப்பு சான்று ஆவணம்1, அதன் அசல் என்னிடம் இல்லை. மேற்சொன்ன ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பி.எச். ஜெவந்ராஜ் சௌகார் என்பவரை நான் நேரில் பார்த்ததில்லை. வரதப்ப நாயக்கர் இருந்து பி.எச். ஜெவந்ராஜ் சௌகார் ஆறு வீட்டு மனைகள் வாங்கியதை நான் நேரில் பார்க்கவில்லை. ஆவணங்கள் அடிப்படையில் தான் கூறுகிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எனது தரப்பு சான்று ஆவணம்5, பி.எச். ஜெவந்ராஜ் சௌகார் என்பவருடைய இறப்புச் சான்றிதழ் போலியானது என்றால் சரியல்ல. என்னிடம் இருந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்தேன். பி எச் ஜெவந்ராஜ் சௌகார் என்பவருக்கு மனைவி பியாரி பாய் என்பவர் இருந்தார் என்றால் ஆவணத்தின் மூலம் எனக்கு தெரியவந்தது.

3. 1998 ஆம் ஆண்டு கௌதம் என்பவர் ரவி என்பவருக்கு சொத்து விற்பனை செய்யும் பொழுது சட்டபூர்வமான வாரிசான பியாரி பாய் என்பவரை மறைத்து விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி எச் ஜெவந்ராஜ் சௌகார் என்பவருக்கு கௌதம் சந்த் என்பவர் மட்டும்தான் சட்டபூர்வமான வாரிசு என்றும் மற்ற வாரிசுகள் யாரும் இல்லை என்பதை கூற முடியாத நிலையில் ரவிக்கு கௌதம் என்பவர் விற்பனை செய்த சொத்து செல்ல தக்கது அல்ல என்றால் சரியல்ல. பி எச் ஜெவந்ராஜ் சௌகார் என்பவருக்கு கௌதம் தான் சட்டபூர்வமான வாரிசு என்பதை நிரூபணம் செய்ய ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளனா என்றால் வாரிசு சான்றிதழ் தாக்கல்

செய்துள்ளேன். 14.12.1998 பத்திரம் பதிவு செய்த பொழுது நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. பி எச் ஜெவந்ராஜ் சௌகார் என்பவருக்கு கௌதம் பிறந்தார் என்பதற்கு பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. வாதி தரப்பு சான்று ஆவணம்2 கௌதம் என்பவர் எதன் அடிப்படையில் அந்த சொத்தை விற்பனை செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பி எச் ஜெவந்ராஜ் சௌகார் இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த இறப்பு சான்றிதழ் எந்த அதிகாரி வழங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பி எச் ஜெவந்ராஜ் சௌகார் இறப்பு சான்றிதழ் உண்மையானது தானா என்பதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. என்னுடைய கிரையதாரர் ரவி என்பவர் மனை எண். 370 மற்றும் 371-ல் பகுதி வாங்கியதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் மனை பிரிவில் 370 மற்றும் 371-க்கு பகுதி இல்லை என்றால் சரியல்ல. . ஒன்றாவது பிரதிவாதி குப்புசாமி 22/7/1986 இல் 371 மனையில் 2915 சதுர அடி வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. ஒன்றாவது பிரதிவாதி குப்புசாமி அவர்கள் சிங்கப்பூரில் வசித்து வந்த காரணத்தால் எனக்கு விற்பனை செய்த எனக்கு முந்தைய விற்பனையாளர்கள் போலியான ஆவணம் தயார் செய்து எனக்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. 2004 ஆம் ஆண்டு இந்த நிலத்தை வாங்கும் பொழுது 1986 இல் குப்புசாமி மற்றும் செல்வராஜ் என்பவர் பெயரில் இந்த இடம் உள்ளது என்பதை தெரிந்து நான் வாங்கினேன் என்றால் சரியல்ல. ஒன்றாவது பிரதிவாதி குப்புசாமி இந்தியாவில் வசிக்கவில்லை என்ற விவரத்தை தெரிந்து கொண்டே நான் அந்த இடத்திற்கு உண்டான

பட்டா சிட்டா ஆகியவைகளை எனது பேருக்கு மாற்றிக் கொண்டேன் என்றால் சரியல்ல. 2004 ஆம் ஆண்டு நான் இந்த சொத்தை வாங்கும் பொழுது வில்லங்கச் சான்றிதழ் பெற்று பார்த்த பொழுது 1986 ஆவணையின் 2021 ஆகிய விவரத்தை பார்த்து தான் சொத்தை வாங்கினேன் என்றால் நான் வில்லங்கம் பார்த்து தான் வாங்கினேன்.

6. அதில் அவரது பெயர் இல்லை. 1986 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் பொது ஆவணம் என்பதால் இத்தனை 33 ஆண்டுகள் கழித்து 2019 ஆம் ஆண்டு இந்த வழக்கை தாக்கல் செய்ததற்கு காரணம் உண்டா என்றால் வேறு ஒருவர் என்னுடைய இடத்திற்கு வந்து நான் உரிமையாளரிடம் முன் தொகை கொடுத்ததாக கூறினார். அதற்கு நான் தான் இந்த இடத்திற்கு உரிமையாளர் என்று கூறினேன். அப்பொழுது தான் எனக்கு தெரிய வந்தது குப்புசாமி என்பவரிடம் முன் தொகை கொடுத்தார் என்று. அப்பொழுதுதான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். காலவரையறை சட்டப்படி இந்த வழக்கு காலவதி ஆன வழக்கு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னுடைய இடத்துக்கு வந்து என்னை மிரட்டியதாக நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். அதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். அந்த புகார் கொடுத்ததற்கு CSR நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது புகாரை காவல் நிலையத்தில் பெற்றுக் கொள்ளவில்லை. 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரதிவாதிகள் என்னை மிரட்டவில்லை என்றாலும் நான் இந்த வழக்கத்திற்காக தயார் செய்யப்பட்ட போலியானவிவரம் என்றால் சரியல்ல.

7. மூன்றாவது பிரதிவாதியின் முகவரி எனக்கு நன்குதெரிந்தும் அவருடைய பூர்வீக கிராமத்து முகவரியை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் நீதிமன்றத்திற்கு சுத்தமான கரங்களுடன் வரவில்லை என்றாலும் நான் பிரதிவாதிகளை மிரட்டி இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா என்பது உரிமை ஆவணம் இல்லை என்பதை நான் தெரிந்து உள்ளேன் என்றால் பட்டாவும் ஒரு ஆவணம் தான். பட்டா வழங்கும் அதிகாரி நிலத்தின் உரிமையை தீர்மானிக்கும் அதிகாரி இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. பட்டா நான் வாங்கும் பொழுது பிரதிவாதிக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பட்டா மாற்றம் செய்யும்பொழுது முதல் பிரதிவாதியின் கருத்தை கேட்டார்களா என்றால் இல்லை. பட்டா எனது பெயரில் உள்ளதால் மட்டும் இந்த சொத்தின் உரிமையாளர் என்று நான் கூற முடியாது என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் நான் முதலாவது பிரதிவாதியின் ஆவணம் போலியான ஆவணம் என்று கூறுகிறேன் என்றால் வரதப்பா நாய்களிடம் இருந்து பி.எச்.ஜெவந்ராஜ் சௌகார் என்பவர் 1968 ஆம் ஆண்டு சொத்தினை வாங்கினார்.

8. அதன்பின்னிட்டு 1998 ஆம் ஆண்டு அவரின் மகன் ரவிக்கு விற்பனை செய்தார். இதற்கு இடையில் 1986 ஆம் ஆண்டு எப்படி முதல் பிரதிவாதி சொத்தினை வாங்கி இருக்க முடியும். அதனால் போலியான ஆவணம் என்று கூறுகிறேன். கைரேகை நிபுணரின் ஆவண அறிக்கை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1986 ஆம் ஆண்டு உள்ள ஆவணத்தில் வரதப்ப நாயக்கரின் கையெழுத்து போலியானது என்பதை நிரூபணம் செய்து உள்ளேனா என்றால் இல்லை. 1986 ஆவணத்தை ரத்து செய்யாமல் வழக்கு சொத்தினை உரிமைக்கு கோரமுடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேனா என்றால் இல்லை. எனது ஆவணத்தின் CHAIN OF DOCUMENTS நிரூபணம் செய்தால் மட்டுமே எனது உரிமை நிரூபிக்க முடியும் என்றால் கௌதம் சந்து என்பவர் தான்

உரிமையாளர் அதனால் அவரிடம் இருந்துதான் சொத்துக்கள் வாங்கப்பட்டது. 1986 ஆவணம் முதலாவது பிரதிவாதி ஆவணம் பத்திர பதிவுத்துறையில் இன்றைய தேதி வரை செல்லுபடியாகதான் உள்ளது என்றால் இல்லை. காலவரையறை பின்பு மற்றும் போலியான ஆவணங்களுடன் தாக்கல் செய்ததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

**Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**